International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 07 Issue: 02 April to June 2025 www.irjtsjournal.org

# சடங்கில் அழகியல் அம்சங்களும் அதன் அணுகுமுறைகளும் : மட்டக்களப்பின் களுமுந்தன்வெளி மாரியம்மன் சடங்குப் பாடல்களை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு

K.Atputhan

**ஆய்வுச் சுருக்கம்** :

இவ் ஆய்வானது மாரியம்மன் சடங்குப் பாடல்களை மையமாகக் கொண்டதாகும். தற்காலச் சூழலில் அழகியல் என்ற சொல்லுக்கு வலுவான முக்கியத்துவம் கொடுப்பதனை காணமுடிகின்றது. அந்தவகையில் ஆய்வாளர்கள் பரிசோதகர்கள், மெய்யியலாளர்கள் போன்றோர் பல்வேறு முறைகளில் அழகியலை வரையறுக்கின்றனர். அழகியலை விளங்கிக் கொள்வதற்கு பல வழிகளை கையாளுகின்றனர். அந்தவகையில் அழகியலானது பல துறைகளில் பரவிக் காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் சடங்குப் பாடல்களில் அழகியல் அம்சங்களை உற்று நோக்க முடிகின்றது.

இவ்வாய்வானது அழகியல் கோட்பாடுகளை மையமாகக் கொண்டு ஆராய்வதுடன் அதனூடாக அழகியல் வெளிப்பாடு எவ்வாறு சடங்கியல் பாடல்களில் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை உற்று நோக்குவதாக அமைகின்றது. அழகியல் அம்சங்களுடைய வகிபங்கு சடங்குப் பாடல்களில் என்ன என்பதை இவ்வாய்வு உற்று நோக்குகின்றது. இவ்வாய்வானது அழகியல் கோட்பாடுகள் அழகியல் பயிற்சிகள், அழகியல் கூறுகள், அழகியல் உருவாக்கம், அழகியல் அணுகுமுறைகள் போன்ற விடயங்களை ஆராய்வதாக அமைகின்றது.

இவ்வாய்வில் சடங்குப் பாடல்கள் முதல் நிலைத்தரவாக அமைவதுடன் இதனோடு தொடர்புடைய இணையம், வெளியீடுகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டாம் நிலைத் தரவாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்** : அழகியல், சடங்குப்பாடல்கள், கோட்பாடுகள், சடங்கு, சமுகம், அணுகுமுறை, கூறுகள்

**அறிமுகம்** :

மொழியானது தொடர்பாடலுக்கு முக்கிய ஒரு கருவியாக காணப்படுகிறது. மனிதன் மொழி ஊடாகவே அதிகமான தொடர்பாடல்களை மேற்கொள்கின்றான். இந்தவகையான தொடர்பாடல் பலவகையானது வாய்மொழி ஊடாக சொற்கள் சார்ந்து எழுத்து அல்லது பேச்சு சார்ந்து வெளிப்படுத்துகின்றான். சொற்கள் சார்ந்த மொழியினை எழுத்து வடிவில் கொண்டு வரும் போது மனிதனுடைய படைப்பாற்றல், மொழியினுடைய திறன் என்பன கண்டறியப்படுகின்றன. அதாவது சொற்கள், வாக்கியங்கள், மற்றும் நோக்கத்திற்கான கட்டமைப்புகளான சிறுகதை நாவல், கவிதை, பாடல்கள் முக்கியம் பெறுகின்றன. இவ் எழுதப்பட்ட வடிவங்களை இலக்கியப் படைப்புக்கள் என அழைக்கப்படுகின்றன. இலக்கியம் கலையினுடைய ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. ஆகவே ஒரு சிறந்த இலக்கியம் உயர்ந்த அழகியல் மதிப்பீட்டினைக் கொண்டதாக காணப்படுகின்றது.

இலக்கியமானது ஒரு வடிவத்தினை பிரநிதித்துவப்படுத்துவது மாத்திரமின்றி ஒரு சமூகத்தினுடைய செயற்பாடுகளை அவர்களின் கலாசாரசூழலில் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. கலாசாரத்தினுடைய வெளிப்பாடான பழக்கவழக்கங்கள், படைப்பாக்கங்கள் வெளிப்படுத்துவதனை நோக்காக கொண்டு ஒரு ஊடகத்தினை வேண்டிநிற்கிறது. அந்தவகையில் காலாசார ஊடகம் பலவடிவங்களில் காணமுடியும். அதாவது, மொழி வடிவம், பொருட்கள், வண்ணங்கள், சத்தங்கள், மற்றும் செயல் இவை கலாசாரத்தின் குறியீடாக காணப்படுகின்றது. அந்தவகையில் கிராமிய வழிபாட்டில் காணப்படுகின்ற சடங்குப்பாடல்கள் கலாசாரத்தினுடைய ஒரு ஊடகமாகவே காணப்படுகின்றது.


© 2025, IRJTSR

இவ் ஆய்வானது அழகியல் பற்றிய கோட்பாட்டினை விளங்கிக்கொண்டு அக்கோட்பாட்டின் பின்னணியில் சடங்குப் பாடல்களின் அழகியலை தெளிவுபடுத்துவதாகும். சடங்கானது சமூக ஒன்றினைவில் நிகழ்த்தப்படுகின்றது. சடங்கியல் சூழலில் மதகுருமார், பத்தர்கள், பார்வையாளர்கள், கடவுளைப் பிரதிபலிக்கும் குழுவினர் ஏனைய ஊர் மக்கள என பலர் ஒன்று கொள்வர். சடங்குப் பாடல்களின் அழகியல் என்பது ஒரு அனுபவங்களாக காணப்படுகின்றது. சடங்குப் பாடல்களில் அழகியல் அம்சங்கள் புதைந்து கிடக்கின்றது. ஆற்றுகைவடிவம் அது முழுமை பெறுகிறது

**அழகியல்**

அழகியல் பற்றிய கருத்துக்கள் அகவயம் சார்ந்ததாக காணப்படுவதுடன் சுவைஞன் பெற்றுக்கொள்ளும் அனுபவமாகக் கூறமுடியும். அழகியல் என்பதனை அழகுணர்ச்சி என்றும் கூறுவர். அழகு மற்றும் சுவை குறித்து ஆராயும் போது அழகியல் என்றழைக்கப்படலானது. அழகியல் கலை, கலாசாரத்தினுடைய கலவை என்றும் கூறுவர். வரையறுக்கப்பட்ட எந்தவித கட்டுப்பாடுகளுக்கும் உட்படாமல் மனரீதியான இரசனைகளையும் அவற்றின் வெளிப்பாட்டையும் பதிவு செய்வதே அழகியல் எனலாம். அதனால் அழகியல் என்பதனை இரசனை என்றும் குறிப்பிடுகின்றனர்.

அழகியல் ஒருவருடைய அனுபவங்களுக்கும் இரசனைகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் ஏற்ப மாறுபடுகின்றது. அதாவது தனிநபர்களால் புரிந்து கொள்ளும் ஒழுக்கம் அழகியல் என்றும் கூறப்படுகின்றது. ஒரு பொருள் ஒருவருக்கு அழகாய் இருப்பது மற்றவருக்கு அழகில்லாமல் போவதற்கும் வாய்ப்புண்டு எனவே அழகியல் எனும் விடயத்தை ஒரு பொது வரையறைக்குள் கொண்டு வருவது கடினமானது. அழகியல் என்ற சொல்லானது அஸ்தாதிக்கோஸ் என்னும் கிரேக்க சொல்லில் இருந்து பிறந்தது. இதனுடைய அர்த்தம் புலனுணர்வு அல்லது உணர்திறன் என்பதாகும். அழகியல் பயன்படுத்தப்படும் சூழலைப் பொறுத்து வெவ்வேறு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அழகியல் என்னும் சொல்லானது, Reflection of poetry என்னும் நூலில் முதன் அலெக்ஸாண்டர் பவும்காடன் என்னும் ஜேர்மனிய நூலில் தத்துவவியலாளரால் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகின்றது. (மீனாட்சி, மு.(1992) ப.12-17)

**மாரியம்மன் சடங்கு**

சடங்கு என்பது சிறப்புக்குரிய வாழ்வியல் குறியீட்டு அளவில் பொருத்தமான நடத்தை முறைகளுடன் தன்னார்வமாக நிகழ்த்தும் ஒரு நிகழ்வாகும். சடங்கானது செயல்பாடுகளையும் தன்மைகளையும் முன்வைக்கும் முதல்வகையானது அனுபவ வழியில் அறிவது . இதனால் ஒவ்வொரு சடங்கும் ஒரு தனித்த பங்கு, பண்பு, செயல், காரண காரியம் உண்டு என்னும் வகையில் ஒவ்வொரு சடங்கும் தனித்த தன்மையினைக் கொண்டது. சடங்கில் அழகியல் அம்சங்களை நோக்கும் போது பல்வேறு வகையில் கண்டுகொள்ள முடிகின்றது. மாரியம்மன் சடங்கினைப் பொறுத்தவரையில் இது பெண் தெய்வத்துக்குரிய வழிபாடாக காணப்படுகின்றது. மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் இச் சடங்கானது நிகழ்த்தப்படுகின்றது. கழுமுந்தன் வெளியில் நிகழ்த்தப்படுகின்ற மாரியம்மன் சடங்கானது ஒரு தனித்துவமான வழிபாட்டை கொண்டமைகின்றது. ஐந்து நாட்கள் இடம்பெறும் இச்சடங்கில் அதிகாலை மதியம் என சடங்குப் பூசைகள் இடம்பெறுகின்றது. இதில் சடங்குப் பாடல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து நிகழ்த்தப்படுகின்றமையை காணமுடிகின்றது. மாரியம்மன் சடங்குப் பாடல்களை நோக்குகின்றபோது மாரியம்மன் காவியம், அம்மானை, தாலாட்டு, குளிர்த்தி, மாரியம்மன் ஊஞ்சல் மாரியம்மன் உலா, மாரியம்மன் நடை, காவடிப்பாட்டு, கரகப்பாட்டு, அகவல், விருத்தப்பாடல், மாரியம்மன் பிரார்த்தனை போன்ற பல பாடல்களை குறிப்பிடலாம்.(கோவர்த்தனன் ,உ. நேர்காணல், களுமுந்தன்வெளி)

இந்தப் பாடல்களில் மாரியம்மனுடைய வரலாறு, மாரியம்மனை வணங்குவதால் தீரும் நோய்கள், மழை வளம் கிடைக்க வேண்டிப் பாடுதல், துட்ட ஆவிகளிடம் இருந்து மக்களை காத்தல், அம்மனின் வீரதீரச் செயல்கள் போன்ற பல விடயங்கள் கூறப்படுகின்றன. (திருச்செல்வம்,வ. நேர்காணல், களுமுந்தன்வெளி)

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR

மாரியம்மன் சடங்குப் பாடல்களில் இரண்டு வகையாக அழகியலை நோக்கமுடியும். இசைநயம், பொருள் நயம் இதனூடாக வர்ணனைகள், மொழிக் கையாள்கை, சொல்லாட்சி, இசை ஆடல் வடிவங்கள் வாத்தியங்கள் போன்ற பல விடயங்களைக் காணமுடியும

இவ் ஆய்வானது அழகியல் அம்சங்ளை சடங்குப் பாடல்களில் ஆய்வு செய்கின்றனர். அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் நிகழ்த்தப்படுகின்ற மாரியம்மன் சடங்குப்பாடல்கள் இவ் ஆய்வில் முக்கியம் பெறுகின்றது. மட்டக்களப்பை பொறுத்தவரையில் பல கிராமிய வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. அதிலும் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் வெவ்வேறுவிதமான முறைகளில் சடங்குகள் இடம்பெறுகின்றன. கண்ணகி அம்மன், காளி அம்மன், வைரவர், பேச்சி அம்மன், திரௌபதை அம்மன், மாரி அம்மன், காத்தான், நாகதம்பிரான் முதலான பல தெய்வங்களுக்கு தனித்துவமான முறையில் சடங்குகள் இடம்பெறுகின்றன. அந்தவகையில் மாரியம்மன் சடங்கும் ஒரு தனித்துவமாக நிகழ்த்தப்படுகின்றது.

மாரியம்மன் சடங்கில் பல விதமான அழகியல் அம்சங்களை காணமுடிகின்றது. அதனுடைய காட்சி அமைப்பு, உடை அமைப்பு, ஒப்பனை, இசை, பாடல், ஒலி ஒளி அமைப்பு என்பவற்றில் அழகியல் தன்மையினை காணமுடிகின்றது. சடங்குப்பாடல்களை குறிப்பாக நோக்குகின்றபோது இங்கு பலவகையான பாடல்களை சடங்கு நிகழ்த்துகையில் நிகழ்த்துகின்றமையினை காணமுடிகின்றது. இதனோடு இணைந்த வகையில் கிராமிய இசைக்கருவிகளும் இணைகின்றபோது அழகியல் தன்மை இங்கு மேலோங்கி வெளிப்படுவதனை காணமுடிகின்றது. இசைக் கருவிகளாக உடுக்கு, பறை, சிலம்பு, அம்மானைக் காய், சொர்ணாலி, மணி, மத்தளம், சல்லாரி போன்ற இசைக்கருவிகள் சடங்குப் பாடல்களுக்கு அழகியல் வலுச் சேர்க்கும் சாதனங்களாக காணப்படுகின்றது..

**ஆய்வுப் பிரச்சினை** :

அழகியல் பற்றி பல துறைகளில் நுணுக்கமான ஆய்வுகள் இடம்பெற்ற போதிலும் பாரம்பரியமாக வழிபாட்டு முறைகளோடு தொடர்புடைய சடங்கு சார்ந்து அதனுடைய பாடல்கள் சார்ந்தும் ஆய்வுகள் இடம்பெறுவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அந்தப் பாடல்களில் அழகியல் தன்மை முழுமையாக பொதிந்து கிடக்கின்றது. இதனை தற்காலத்தில் வெளிக்கொணராமை ஆய்வுப் பிரச்சினையாக கொள்ளமுடிகின்றது

சடங்கில் பல ஆய்வுகள் இடம்பெற்றபோதிலும் அழகியல் ரீதியாக ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றது. அதிலும் சடங்குப் பாடல்கள் சார்ந்த அழகியல் ஆய்வுகள் இடம்பெறுவது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்** :

அழகியல் அம்சங்களை சடங்குப் பாடல்களில் ஆராய்ந்து கண்டறிதல்

சடங்குப் பாடல்களின் அழகியலானது ஏனைய கலைகளின் அழகியலில் இருந்து வேறுபட்டு நிற்கும் தன்மையினை அடையாளப்படுத்துதல்.

அழகியல் அணுகுமுறைகளை கையாளும் விதத்தினை ஆராய்தல்.

சடங்குப் பாடல்களை அழகியல் ஊடாக ஆராய்ந்து அதற்கான முக்கியத்துவத்தினை தற்காலத்தில் வழங்குதல்.

அழகியல் சார்ந்து சடங்கில் பல்வேறு விதமான ஆய்வுகளை மேற்கொள்ள தூண்டுதல்.

**ஆய்வுமுறையியல்**

இவ் ஆய்வில் இரண்டு வகையான ஆய்வுமுறை பயன்படுத்தப்படுகின்றது. முதலாவதாக அழகியல் கோட்பாட்டு சார்ந்து இலக்கிய ரீதியான ஆய்வு ஊடாக அழகியல் கோட்பாட்டை விளங்கிக்கொள்ளல். இரண்டாவதாக சடங்கு சார்ந்து தரவுகள் சேகரிக்க இலக்கிய, கள ஆய்வுகளை மேற்கொள்வதனூடாக observation method,


© 2025, IRJTSR

interview method இனை கையாளுதல். இவ் ஆய்வில அழகியல் எனும் கோட்பாட்டு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இதனூடாக களுமுந்தன்வெளி மாரியம்மன் சடங்கில் அழகியல் அம்சங்களையும் அதன் அணுகுமுறைகளையும் சடங்குப் பாடல்களைக் கொண்டு ஆய்வு செய்வதாகும். மாரியம்மன் சடங்கு, அதன் பாடல்கள், அதன் நிகழ்த்துகை. இசைகருவிகள் போன்ற அடிப்படைகளைக் கொண்ட ஆய்வாக அமைவதனால் விளக்கமுறையியல் (Exploratory method) இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு முறையியல் (Qualitative research design) எனும் ஆய்வு நுணுக்கம் பின்பற்றப்படுகிறது. நேர்காணலும் (Unstructured Interview) குறிப்பிட்ட குழுவினருடனான கலந்துரையாடலும் (Group discussion)ஆய்வுக்கான கருவிகளாகப் (Research tools) பயன்படுத்தப்படுகின்றன. பண்புசார் அடிப்படையில் தகவல்கள் ஆராயப்படுகின்றன. பண்புசார் ஆய்வின் அடிப்படையில்
பரிந்துரைகளும் முடிவுகளும் பெற்றுக்கொள்ளப்படும்.

**கோட்பாட்டு அணுகுமுறை**

அழகியல் பற்றி கிரேக்க தத்துவவியலாளரான பிளேட்டோ அழகு எனும் போது வடிவம் தான் அழகு என்கின்றார். ஏனெனில் புறப்பொருட்கள் தோன்றி அழிகின்றது. ஆனால் புறப்பொருட்களுக்கு அப்பால் அதன் சாராம்சமாக இருக்கும் வடிவம் என்றும் மாறாது. இத்தகைய வடிவமாக அழகியலை பிளேட்டோ கருதுகின்றார். (மேலைத்தேய அழகியல் ப.9) அரிஸ்ரோட்டில் தனித்தனிப் பொருட்களின் பண்புகளுக்கு ஏற்ப அவற்றை முறைப்படுத்தும் போது அழகு உண்டாகின்றது என்கின்றார். இவர் Plot என்ற விடயமூடாக இதனை நிறுவுகின்றார். அதாவது, சம்பவங்களை விடயங்களை ஒழுங்குபடுத்துதலில் இதனை விளங்கிக் கொள்ளமுடியும். அகச்சீர்மையும் சமூகச் செயற்பாடும் சமூக மதிப்பும் ஒன்றுசேரும்போது அழகுடையதாகின்றது என MVkarousky (1979) கூறுகின்றார். அதேபோன்று முறையே ஒத்திசைவு, துல்லியம் போன்ற விடயங்கள் ஊடாக G.LVKACH அழகியலை நிறுவுகின்றார்.

இம்மானுவேல் கான்ட் 1724 - 1804 அழகியல் என்னும் போது புலனின்பமும் அழகும் இணைந்தவை அழகியல் என்கின்றார். அழகியல் சுய ஆதிக்கமானது. அதுமாத்திரமன்றி அழகியல் என்பது தூய்மையான உணர்வின் தோற்றத்தினையும் கலையாக அதன் வெளிப்பாட்டையும் திறனாய்வு செய்யும் தத்துவம் என்கின்றார். அத்துடன் காண்டின் கூற்றுப்படி அழகு என்பது உணர்ச்சியோடு இயைந்த அழகுணர்ச்சி என்கின்றார். அதாவது அவரவர் அகநிலைக்கு ஏற்ப அழகுணர்ச்சி அமையும். இவரின் கூற்றுப்படி சுயமுடிவு - ஒன்று ஒருவருக்கு அழகு அது மற்றொருவருக்கு அழகு இல்லை. பிரபஞ்சம் - அனைவரும் ஏற்கும் அழகை இரசிக்கவைக்கும். தேவை - தனக்கு வேண்டியதை அழகாக்கிக் கொள்ளல். நோக்கம் - உள்நோக்கத்தோடு அழகை ஏற்றுக்கொள்ளல் என விபரிக்கின்றார்.

Hegel கூறுகையில் அழகியல் அல்லது அழகுணர்ச்சி மூன்றுவகைப் புலனுணர்வைக் கொண்டதாக வரையறுக்கின்றார். பொருத்தமான புலனுணர்வு, பொதுவான புலனுணர்வு, புலனுணர்வுத் தரம் என வரையறுக்கின்றார். எனவே அழகியல் ஞாபகங்கள் உணர்வுகள் அறிவுத்திறனோடு தொடர்புடையதாக இருக்கின்றது. Kevin Kessler அழகியல் பண்பு பற்றி குறிப்பிடும் போது ரிதம்(rhythm)இ juxtaposition, Emotion(உணர்வு), humor போன்ற விடயங்களை விவரிக்கின்றார் (Kevin Kessler. (.2021). Hanns Eisler and Theodor Adorno அவர்கள் elements of aesthetic இல் குறிப்பிடும் போது inner rhythm, imagine, adequate(தகுந்த அளவு), creation and composition போன்றவற்றினுடாக விளக்குகிறார் (Hanns Eisler and Theodor Adorno .(1947) ப1-12). Jonathan L. Freedman அவர்கள் musical aesthetic எனும் நூலில் Emotion, listening, performance, composition, nature போன்ற விடயங்களை பிரதானமாக கொள்கிறார் (Jonathan L. Friedmann. ( 2018) ப.28-32)

Rikyan Dyah Bathari Widowati தனது The aesthetic studies of song lyrics எனும் ஆய்வில் typography, theme, rhythm, dimension, diction, figure of speech, imaginary போன்ற விடயங்களை முன்னிலைப்படுத்துகிறார் (Rikyan Dyah Bathari Widowati.(2019)ப. 19-25 ). Analystic on the aesthetic characteristics of spots music and it's communication channels எனும் ஆய்வில் Na Zhou கூறுகையில் artistic sound composition, spiritual emotional beauty, dynamic beauty போன்ற பண்புகளை குறிப்பிடுகின்றார். (Na Zhou(2021) ப.06)Analystic on the aesthetic characteristics of spots music and it's communication channels-volume-02 no.06 ISSN 2523-58877 – 2021)

இப்பின்புலத்தில் சடங்கியல் அழகியல் அம்சங்களாக ரிதம், இடம்(space), சொல்லாடல்(text), உணர்ச்சி(Emotion), நகைச்சுவை, சூழல், பாத்திர உருவாக்கம், கரு, பார்வையாளரை ஈர்க்கின்ற தன்மை, மாறுபாடு, கற்பனை, தொகுப்பு, விளக்கம், மொழிநடை, வர்ணனை, இசை, வாத்தியங்கள், ஆற்றுப்படுத்தல், காட்சி, Plot, தகுந்த அளவு, Dramatic change, creation and composition, spiritual emotional beauty, குறியீடு, அணிகள் போன்ற பல அம்சங்களை குறிப்பிடலாம் இவை மட்டக்களப்பின் களுமுந்தன்வெளி மாரியம்மன் சடங்குப் பாடல்கள் ஊடாக ஆராயப்படுகின்றது

**மாரியம்மன் சடங்கில் அழகியல் அம்சங்கள்**

சடங்குப் பாடல்களில் இரண்டு வகையாக அழகியலை நோக்கமுடியும். அவை, இசைநயம் பொருள் நயம் என்பனவாகும். பிளேட்டோ இசை பற்றிக் கூறும் போது உணர்ச்சிகள் மட்டும் இயற்கை ஒலிகளில் போலச் செய்தல் அல்லது நகல்தல்தான் இசை என்கிறார். (பிரேம்குமார்,இ.(2013)ப.11)

.சமூகத்தின் விளைபொருளாகிய மொழி அழகியலை வெளிப்படுத்தும் பண்பு கொண்டது. புலக்காட்சி கொள்ளல் சிந்தித்தல், அறிவையும் அனுபவங்களையும் தேக்கி வைத்தல் ஊடுகடத்தல் முதலியன மொழியால் மேற்கொள்ளப்படுகின்றன. மொழியை ஊடகமாக கொண்ட கவிதையை அடிப்படையாக வைத்து பண்டைய அழகியல் இடம்பெற்றுள்ளது. அரிஸ்ரோட்டிலின் கவிதையியலில் ஆறாம் அத்தியாயத்தில் அவலச்சுவை பற்றி விளக்குவது, பரதர் தம் நாட்டிய சாஸ்திரத்தில் திருஸ்டிய காவியமாக நாடகத்தை அடிப்படையாக வைத்து இரசக் கொள்கை பற்றி பேசுவது நோக்கத்தக்கது.

புலன் மற்றும் உணர்ச்சி சார்ந்த மதிப்பீடுகளாக அழகியல் மதிப்பீடுகள் உள்ளன. உணர் திறன் அல்லது புலன்களின் வாயிலாக உணரும் திறன் (லீஸ், அவ்னர் - 1984) என அழகியலுக்கு விளக்கம் தருகின்றார். அழகியல் என்னும் போது கலைக்கும் அழகியலுக்கும் உள்ள தொடர்பினை பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். "கலைப்படைப்பு வழங்கும் அழகியல் பற்றிய நோக்கு கலைகளின் தன்மை பண்பாடு கலையை இரசிக்கும் சுவைஞனின் தன்மை சமூகவேறுபாடு என்பவற்றுக்கேற்ப மாறுபடும் தன்மையுடையது. (வடிவேல் இன்பமோகன் - கூத்தழகியல்)

மாரியம்மன் சடங்குப் பாடல்களை நோக்குகின்றபோது மாரியம்மன் காவியம் முக்கியமான பாடல்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

"தந்தனத னாதனத னாதனத னானா

தனனாத னாததந்த னாதனத னானா

அமிர்த பரி பூரணி நளின விழி காரணி

அன்ன பரி பூரணி சொர்ணமருள் பாகரி

திமிர்தமா திமிதி என நடனமிடும் மகமாரி


© 2025, IRJTSR 

தேவர் தொழு தேவி நின் தாளினை வழுத்த ...'' இப்பாடலை நோக்கும் போது மோனை அணியினைக் கையாண்டுள்ளமை அழகியல் தன்மைக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அதே போன்று மாரியம்மன் அகவலை நோக்குகின்ற போது சந்தச் சிறப்பு, ஓசை நயம் மிக்கதாக காணப்படுகின்றது.

''ஓம் பூவினிய மாதே கேளாய்

உன் பொன்னடி காணவந்தேன்

மேவிய மாரியம்மன் திருவுளம் பொருந்துண்ணாதோ

ஆதியாய் சோதியாய்

அரண்முடி பாதங்கையாய்

அண்ட பகிரண்டமாய்

ஐம்பத்தொரு அட்சரமாய்

சோதியாய் வெட்ட வெளிச்சமாய்

சொருபமாய் நின்றவளே

பரவேசம் பரசுராமனைப் பெற்றவளே''

மாரியம்மன் சடங்கு பாடல்களில் தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றமையினைக் காணமுடிகின்றது.

''அம்மாளே எங்கே வாராமுகமோ சிவமுத்துமாரி

தாயாருக்கு எவ்விடமோ சிந்தனையோ சிவமுத்துமாரி

அம்மாளே கடலில் தலை முழுகி சிவ முத்துமாரி

அம்மன் காஞ்சிபுர பட்டுடுத்தாள் சிவமுத்துமாரி

அம்மாளே ஆற்றில் தலைமுழுகி சிவமுத்துமாரி

அம்மன் ஆவரம்பூ பட்டுடுத்தாள் சிவமுத்துமாரி ..''

அதே போன்று இன்னொருவகையான காவியத்தையும் மாரியம்மன் சடங்கில் பாடப்படுகின்றமையினை காணமுடியும்.

''கண்ணனூர் வந்தநீ

கம்பையில் வளர்ந்த நீ

கரகமது எடுத்த நீ

குளையது பிடித்த நீ

முன்னமே வந்த நீ

முப்புரம் எரித்த நீ

மூவர் தொழு மூர்த்தி நீ

பங்கையச் செல்வி நீ

பாரளந்தவள் நீ

அன்னையே முன்னையே

எனையாள வந்த நீ

அகில நாயகியே …''

அது மாத்திரமன்றி மாரியம்மன் சடங்குப் பாடல்களில் கும்பிப்பாடல்கள் இடம்பெறுவதனைக் காணமுடியும்.

“தந்தனத்தோம் தனமம்மா சிவ முத்துமாரி

அம்மா தானினத்தோம் தானமம்மா சிவ முத்துமாரி

மாரி தாய் வல்லவியே சிவமுத்துமாரி

நீ பாராது வாருமம்மா சிவமுத்துமாரி

தாயே சுகந்தரியே சிவமுத்துமாரி

எங்கள் சகுந்தரியே வாருமம்மா சிவமுத்துமாரி

கோபாலன் தங்கையல்லோ சிவமுத்துமாரி

ஓங்கார ரூபினியே சிவமுத்துமாரி …''

அதே போன்று அழைப்புப் பாடல்

“ சிலம்பு கலகலவென மாரியம்மா

செஞ்சிலம்பு ஓலமிட மாரியம்மா

ஏனம்மா தாமதமோ சிவமுத்துமாரி

வாவனம்மா வாவனம்மா சிவமுத்துமாரி

வந்திறங்கும் நேரமம்மா சிவமுத்துமாரி…''

கழுகுமலை பத்தும் மாரியம்மன் சடங்கில் முக்கியத்துவம் பெறுகின்றது. காவடி எடுத்து வருகின்றபோது காவடிப்பாட்டு ,கும்மிப் பாட்டு போன்ற பல பாடல்கள் பாடப்படுகின்றமை கண்டு கொள்ளமுடிகிறது.

“கழுகுமலை தனிலுறையும் முருகவேளே

கருத்துடனே உன்பாதமலர் தானே ஓத

பழுதொன்றும் வாராமல் காக்கவேண்டும் …''

இதே போன்று கரகத் தாலாட்டு, குளிர்த்திப் பாடல் அம்மானை, ஊஞ்சல். மாரியம்மன் நடை, உலா மாரியம்மன் பிரார்த்தனை விருத்தப்பாடல் என பல பாடல்கள் இடம்பெறுகின்றது. இப்பாடல்கள் ஊடாக வர்ணனை மொழி

சொல்லாட்சி இசை ஆடல் வடிவம் வாத்தியங்கள் போன்ற பல வடிவங்கள் ஒன்று சேர்ந்து சடங்குப் பாடல்களுக்கான அழகியலை மேலோங்கச் செய்கிறது. இப்பாடல்கள் ஆற்றுப்படுத்தலுக்குரிய பாடல்களாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (யோகநாதன், ஆ. நேர்காணல், களுமுந்தன்வெளி)

மேற் கூறப்பட்ட பாடல்கள் நிழ்த்தப்படுகின்ற இடம் ஊடாக சடங்கழகியலையும், சடங்குப்பாடல்களின் அழகியலையும் விளங்கிக்கொள்ள முடியும்

**முடிவுரை**

சடங்குகளில் அழகியல் தன்மையானது இயற்கையாகவே அனைவரும் அனுபவிக்கும் அல்லது உணரும் திறனை கொண்டதாக காணப்படுகின்றது. முற்று முழுதாக நோக்குகின்றபோது மாரியம்மன் சடங்குப்பாடல்கள் நிகழ்த்துகின்றபோது அதற்கான ஒரு இடத்தினை அது கொண்டுள்ளதோடு ஒவ்வொரு வெவ்வேறு தளங்களில் இடம்பெறுவதனைக் காணமுடியும். இந்தப் பாடல்களை மதகுருமார், பக்தர்கள் ஏனைய பார்வையாளர்கள் என எந்தக் கட்டுப்பாகளும் இன்றி யாரும் இசைக்கக்கூடிய வகையில் நிகழ்த்தப்படுகின்றமை காணமுடிகின்றது.

அழகியல் அணுகுமுறையானது சமூக ஒன்றினைவின் மூலமே சாத்தியப் பாடுடையதாக அமைகின்றது. இலக்கியத்தில் இருப்பதை விட ஆற்றுகை வடிவத்திலே அதனுடைய அழகியல் தன்மையானது முற்றுமுழுதாக வெளிப்படுவதனைக் காணமுடிகின்றது.

மாரியம்மன் சடங்குப் பாடல்களானது தனித்துவம் பொருந்தியதாகவும் அதனுடைய அழகியலிலும் தனித்துவத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. மாரியம்மன் சடங்குப் பாடல்கள் தனித்துவமான அழகியல் தன்மையினை மதிப்பீட்டினையும் கொண்டுள்ளமையினையை இவ் ஆய்வினூடாக கண்டுகொள்ளமுடியும்.

**உசாத்துணை**

[1] பிரேம்குமார்,இ.(2013) மேலைநாட்டு அழகியல்இ குமரன் புத்தக இல்லம், கொழும்பு
**[2]** மீனாட்சி, மு.(1992) அழகியல் அல்லது கலை கலைக்காகவே, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை .
[3] Hanns Eisler and Theodor Adorno .(1947) Element of aesthetics- chapter-5, Dobson Ltd. London
[4] Jonathan L. Friedmann. (2018) musical aesthetic, cambridge scholar publishing)
[5] Kevin Kessler. (.2021) codeless.lo./writing-aesthetic
[6] Na Zhou(2021) Analytic on the aesthetic characteristics of spots music and it's communication channels- volume-02 no.06 ISSN 2523-58877
[7] Rikyan Dyah Bathari Widowati.(2019)The aesthetic studies of song lyrics volume1-no.1
[8] திருச்செல்வம், வ. தலைமை குரு, வயது 42, களுமுந்தன்வெளி
[9] கோவர்த்தனன், உ விவசாயம், வயது 20, களுமுந்தன்வெளி
[10] யோகநாதன், ஆ விவசாயம், வயது 52, களுமுந்தன்வெளி

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR